அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கை இல. 335

அரசாங்க நிருவாக அமைச்சு,
சுதந்திரச் சதுக்கம்,
கொழும்பு. 7
22 ஜூலை, 1986.

எல்லா அமைச்சுக்களின் செயலாளர்களுக்கும்,
திணைக்களத் தலைவர்களுக்கும்.

தாபனக் கோவையின் திருத்தங்கள்

1. கடைசியாகப் பெற்ற சம்பளம் - அத்தியாயம் VII

(அ) பின்வருவதை 4-ஆம் பிரிவுடன் சேர்க்க.

"4:9 கடைசியாகப் பெற்ற சம்பளம்" என்பதன் அர்த்தம் ஓர் உத்தியோகத்தர் சம்பள மீளாய்வு நடைமுறைக்கு வருவதற்கு உடன் முந்திய திகதியில் பெற்ற சம்பளத்தைக் குறிக்குமேயன்றி சம்பள மீளாய்வு பற்றி அறிவிக்கப்படும்பொழுது பெற்ற சம்பளத்தைக் குறிக்காது.

(ஆ) "கடைசியாகப் பெற்ற சம்பளம்" என்பதன் அர்த்தம் ஓர் உத்தியோகத்தர் பதவி உயர்வு நடைமுறைக்கு வருவதற்கு உடன் முந்திய திகதியில் பெற்ற சம்பளத்தைக் குறிக்குமேயன்றி பதவி உயர்வு பற்றி அறிவிக்கப்படும் பொழுது பெற்ற சம்பளத்தைக் குறிக்காது.

2. ஓய்வு விடுதலை - அத்தியாயம் XII

8:1 ஆம் பிரிவை நீக்கிவிட்டு பின்வருவதைப் பதிலிடு செய்க.

"8:1 ஓர் உத்தியோகத்தருக்கு ஆண்டு தோறும் கூடியது 24 நாட்கள் ஓய்வு விடுதலை வழங்கலாம். ஏழு தினங்கள் வேலை செய்ய வேண்டியவர்களின் விடயத்தில் (மருத்துவ உத்தியோகத்தர், தாதிமார், பொலிஸ், சிறைச்சாலை உத்தியோகத்தர்) இந்த ஓய்வு விடுதலையின் உச்ச அளவு 28 நாட்களாக இருக்க வேண்டும்."

ஒப்பம்: டி. பி. ஜ. பி. எஸ். சிறிவர்தன.
செயலாளர்,
அரசாங்க நிருவாக அமைச்சு.